Department of Education, Sabaragamuwa Province/ Weekly School

மாகாண கல்வித் திணைக்களம் - வாராந்தப் பாடசாலை

பாடம்: தமிழ் மொழி

வாரம் - 10

தரம்: 11

ஆக்கம்: ஆசிரியர் R.யசந்தன்
கே/ உந்துகொடை தமிழ் மகா வித்தியாலயம்

## பகுதி - 1

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக
- 1 தொடக்கம் 5 வரையான வினாக்கள் இலக்கணம் சார்பானவை. அவை ஒவ்வொன்றின் கீழும் 1, 2, 3, 4 என்று இலக்கமிடப்பிடப்பட்டிருக்கும் தெரிவுகளில் சரியானது அல்லது மிகப்பொருத்தமான விடையை தெரிவு செய்க

01. பின்வருவனவற்றுள் இயல்பு புணர்ச்சியாக அமைவது
    1. கடல்நீர் 2. வானவில் 3. மட்குடம் 4. யானைப்பாகன்

02. பூங்குழலாள் பாடினாள். இங்கு பூங்குழலாள் என்பது
    1. உவமைத்தொகை 2. அன்மொழித்தொகை
    3. வினைத்தொகை 4. பண்புத்தொகை

03. பின்வருவனவற்றுள் உரிச்சொற்றொடராய் அமைவது
    1. கருமை 2. சாலச்சிறந்தது 3. வட்டக்கல் 4. தேனருவி

04. மழை இன்று பெய்தாலும் பெய்யலாம். என்னும் வாக்கியத்தில் ‘உம்’ என்னும் இடைச்சொல் உணர்த்தும் பொருள்
    1. எதிர்மறை 2. ஐயம் 3. தேற்றம் 4. பிரிநிலை

05. தோன்றா எழுவாய் கொண்ட வாக்கியம்
    1. கமலா வந்தாள் 2. வல்லமை தாராயோ
    3. அரவுகடித்தால் மரணம் 4. ஆலும் வேலும் பல்லுக்குறுதி

## பகுதி 2

பின்வரும் பாடலைப்படித்து அதன் கீழ் தரப்படுகின்ற வினாக்களுக்கு விடை எழுதுக

1. தென்றலிலே அசைந்தாடும் செந்நெல்வயற் கதிர்கள்
தேனருவி என வழியும் ஏருழவன் வியர்வை
குன்றெனவே நிமிர்ந்தோங்கிக் குதூகலிக்கும் தோள்கள்
குணக்குன்றாய் உழைத்துண்ணும் குலவிளக்காம் மனிதன்
முன்றலிலே மண்ணளைந்து முழங்காலில் தவழ்ந்து
முத்துதிர நகைசெய்யும் சொத்தாகும் மழலை
கன்றினது உடல்நக்கிக் கனைக்கின்ற பசுக்கள்
கரைத்தழைத்து இரையுண்ணும் காக்கைகளின் கூட்டம்

1. இப்பாடலில் உழவனின் சிறப்பு எவ்வாறு எடுத்துக்காட்டப்படுகின்றது?
2. இப்பாடலில் இடம்பெறும் உவமை அணிகளை குறிப்பிடுக?
3. இப்பாடலில் இடம்பெறும் உருவக அணி இரண்டினைக் குறிப்பிடுக.
4. உயிரினங்களின் செயற்பாடுகளின் ஊடாக பெறக்கூடிய படிப்பினை யாது?

2. ஓடுகின்ற நீரையெதிர்த் தோடுகின்ற மீன்கள்
ஊருகின்ற சிற்றெறும்பின் ஒழுங்குமுறை வாழ்க்கை
ஆடுகின்ற பூமரங்கள் அசைகின்ற இலைகள்
அதிகாலை எழுந்துஇரை தேடவரும் பறவை
மூடுகின்ற இமைக்கடங்கா முழுநிலவு விழிகள்
முந்தானைச் சேலைகட்டும் செந்தாழம் பூக்கள்
கூடுகின்ற இயற்கையெழில் குதூகலத்தைத் தருமே.
குழந்தையென எனதுமனம் குதித்தாடும் தினமே.

1. உயிரினங்களின் செயற்பாடுகளின் ஊடாக பெறக்கூடிய படிப்பினை யாது?
2. இயற்கைக்காட்சி எவ்வாறு எடுத்துக்காட்டப்படுகின்றது?
3. இப்பாடலில் இடம்பெறும் அணியை எடுத்துக்கூறுக.